பக்கங்கள் -06 விலை 5/=

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM இதழ்

தீபம் -58 மார்ச் 2004 ஒளி -78

**சிந்தனைச் சுடர்**

சோசலிச பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கும் பணியில் கூட்டுறவு இயக்கம் தலைசிறந்த பங்கு வகிக்கின்றது. நாட்டிலுள்ள சாதாரண மக்களின் நல்வாழ்வுக்காகப் பணிபுரிவதில் இந்த இயக்கத்திலுள்ள அனைவரும் சிறந்த நிருவாகத்திலும, தன்னலமற்ற சேவையிலும் முன்மாதிரியாக விளங்குவார்கள் என நம்புகின்றோம்.

-டாக்டர் இராதாகிருஷ்ணன்.

# வளம் நிறைந்த குடாநாட்டை விருத்தி செய்ய கூட்டுறவு அமைப்புக்கள் முன்வர வேண்டும்

## நல்லூர் பிரதேச செயலர் வேண்டுகோள்

திறமையான தையல் விற்பன்னர்கள் உள்ள எமது யாழ். குடாநாட்டில் பாரியளவிலான ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவ ஏன் எவரும் முன்வரவில்லை என நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் கேள்வி எழுப்பினார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் மகளிர்குழு கோண்டாவில் வடமேற்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடத்திய மனைப்பொருளியல் கண்காட்சியில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பினார்.

மாவட்ட மகளிர்குழு உபதலைவி திருமதி.ப.சந்திரபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியதாவது,

வடக்கு - கிழக்குப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அரசாங்கத்தினால் பல ஆடை உற்பத்தி நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை காலத்துக்குக்காலம் விருத்தி செய்யப்படுகின்றன. இதனால் அப்பகுதிகளில் பெண்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்புக்கள் கிட்டுவதுடன் அவ்வவ் பிரதேசத்திலுள்ள வளங்களைப் பயன்படுத்தவும், அவற்றின் மூலம் கிடைக்கும் வருவாயைப் பெற்று





யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுசபையின் மாவட்ட மகளிர்குழு அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு கோண்டாவில் வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் (மஞ்சத்தடி, இணுவில்) நடாத்திய மனைப்பொருளியல் கண்காட்சி ஆரம்ப வைபவத்தில் கூட்டுறவுசபைத் தலைவர் பெ.கனகசபாபதி கொடியேற்றுவதையும், நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் மங்களவிளக்கேற்றுவதையும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

அந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும் வாய்ப்புகள் உண்டாகியிருக்கின்றன.

ஆனால், இப்பிரதேசங்களில் உள்ள தையல் வல்லுநர்களை விட, எமது பிரதேசங்களில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் ஏராளமான தையல் விற்பன்னர்கள் உள்ளனர். இவர்களின் திறமைகளை அவ்வப்போது யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் தையல் பொருட்கண்காட்சிகளில் காணக்கூடியதாக உள்ளது.

தையல் விற்பன்னர்களில் ஏராளமானோர் வாழும் யாழ் குடாநாட்டில் நவீனரக ஆடை உற்பத்தி நிலையம் ஒன்றை யாழ். மாவட்டத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் நிறுவுவதற்கு முன்வர வேண்டும்.

இதனை யாழ்.மாவட்ட கூட்டுறவாளர்கள் செய்வதற்கு முன்வருவார்களானால் எமது பிரதேசத்தில் வாழும் தையல் கலைஞர்களுக்கு ஒரு சிறந்த தொழில்வாய்ப்பினைப் பெற்றுத் தருவது மட்டுமன்றி, கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பின்தங்கிப் போயுள்ள யாழ். மாவட்டம் "குட்டிச்சிங்கப்பூர்" என வர்ணிக்கப்பட்டு எமது யாழ். குடாநாடு மீண்டும் புதுப் பொலிவுடன் விளங்க வாய்ப்பு உண்டாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க...)

### வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்

## அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கி கௌரவிப்பு

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், **2002/2003** ஆம் ஆண்டுக்குரிய 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர், பணியார்களின் பத்தொன்பது பிள்ளைகளுக்கு சமாசத்தின் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பிள்ளைகளைப் பாராட்டி சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதியை வழங்கிக் கௌரவித்துள்ளது.

இது தொடர்பான பாராட்டு விழா, சமாசத் தலைவர் கி.தவராசா தலைமையில் 14.3.2004 அன்று சமாச மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டுறவுக் கொடி ஏற்றத்துடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் சு.கணேசமூர்த்தி, (ப.தெ.வளம்), பொ.சிவலிங்கம் (கணககாய்வு) கலந்து கொண்டார்கள்.

சமாசத்தின் கல்வி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் **2002/2003**ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு தலா 5000ரூபா வைப்புச் செய்த பாஸ் புத்தகமும், 500ரூபா பெறு மதியான பாடசாலை உபகரணங்களும் பரிசாக வழங்கப்பட்டன.

(5ஆம் பக்கம் பார்க்க...)

**நேர்மையை விட்டுக் கொடாமலும், மனத்தில் உள்ளதை ஒளியாமலும், எதிராளக்கு மனம் நோகாத வகையிலும் எடுத்துச் சொல்ல கொஞ்சம் பழக்கம்வேண்டும். அதைப் பழகிவிட்டால் எதிர்கால மகிழ்ச்சிக்கு கடைக்கால் போட்டுக் கொண்டதாகவே நம்பலாம்.**

# கூட்டுறவு நிறுவனங்கள் வினைத்திறன் மிக்கதாக அமைய பயிற்சிகள் அவசியம்!

யாழ்.மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களை வினைத்திறன் மிக்கதாக மேம்பாடு அடையச் செய்து அவற்றைக் கட்டிஎழுப்புவதற்கு கூட்டுறவுப் பயிற்சிகள் அவசியம் தேவைப்படுகிறது. இந்தவகையில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபை பல்வேறுபட்ட பயிற்சி நெறிகளை நடத்திவருகிறது. இவ்வாறு கூட்டுறவுசபைத் தலைவர் பெ.கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பயிற்சிநெறியில் பயிற்சி பெற்று அப்பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய பயிற்சியாளர்கள் மத்தியில் உரையாற்றும்போதே கூட்டுறவு சபைத் தலைவர் பெ.கனகசபாபதி மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை பாரிய நிதி நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளபோதும், ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான ரூபாக்களை செலவு செய்து இப்பயிற்சிகளை நடத்தி வருகிறது. இதேவேளை இப் பயிற்சிகளை மேற்கொள்வதற்காக பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களும் தமது பணத்தில் பெருந்தொகையான பகுதியைச் செலவு செய்து வருகின்றன.

பெருந்தொகைப் பணச் செலவின் மத்தியில் நடத்தப்படும் இப்பயிற்சி நெறிகளில பங்குகொள்ளும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் சிறப்பான முறையில் பயிற்சியினை மேற்கொண்டு சிறந்த பெறுபேறுகளைப்பெற்று தங்கள் தங்கள் சங்கங்ளை வினைத்திறன் உடையவையாக மாற்றவேண்டும்.

இந்நிலையில் பண நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் நடத்தப்பட்டு வரும் இப்பயிற்சி நெறியில் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பெருமளவு ஆர்வம் காட்டாமல் இருப்பது மனவருத்தத்தை ஏற்படுத்தும் செயலாக இருப்பதாக சுட்டிக்காட்டிய தலைவர், இப்பயிற்சிநெறியில் கூடுதலான பணியாளர்கள் பயன்பெற முன்வருவார்களானால் இப்பயிற்சிகள் யாவும் பயனுறுதி உள்ளவையாக அமையும் என்று சுட்டிக்காட்டினார்.

இவ்வைபவத்தில் மாவட்ட கூட்டுறவு சபையின் செயலாளர், சு.சிவசுப்பிரமணியம், கல்லூரி அதிபர் பொ.சணமுகசுந்தரம், மற்றும் விரிவுரையாளர்களும் கலந்துகொண்டார்கள்.

# சிறுநீரக அழற்சிநோய் பற்றிய ஆய்வு

இந்த நோயில் சிறுநீரகங்கள் அழற்சியடைகின்றன. தீவிர நோய் ஆகவும் அல்லது நாட்பட்ட நோயாகவும் இந்நோய் காணப்படுகின்றது. சிறுநீரக அழற்சிநோயைச் சித்த மருத்துவர்கள் மேகரோகங்களில் ஒன்றாக கணிக்கிறார்கள். இந்த நோய் ஏற்படுபவர்களுக்கு சலாசயங்கள் பாதிப்படைவதோடு சலத்திலும் மாறுபாடுகள் காணப்படுகின்றன. மேகங்கள் தோன்றுவதற்கு வெப்பம் காரணமாயிருப்பதுபோல உடலில் மேகநோய் தோன்றுவதற்கு சூடு அதிகரிப்பதே மூல காரணமாக அமைகின்றது. சிறுநீரகங்களைச் சில இரசாயன மருந்துகள் அழற்சி அடையச் செய்கின்றன.

நச்சுச் செறிவு உள்ள உணவுகளாலும் வேறு பல காரணங்களினாலும் சிறுநீரக அழற்சிநோய் உண்டாகின்றது. சிறிய பாதிப்புடன் நோயின் கடுமை தெரியாதவாறு உண்டாகும் அழற்சி நாட்பட்ட நோயாகும். தீவிரமாக திடீர் என உண்டாகி சிறுநீரகத்தின் மயிர்த்துளைக் குழாய்களில் அழற்சியை உண்டுபண்ணி சலம் போவது பெருமளவில் குறைந்து காணப்படுவது தீவிர சிறுநீரக அழற்சிநோய் ஆகும். இவற்றை ஆங்கிலத்தில் (அக்கியூற் நெப்பிறைறீரிஸ்) **Acute Nephritis** என்றும் (குறோனிக் நெப்பிறைறீரிஸ்) **Chronic Nephritis** என்றும் அழைப்பார்கள்.

தீவிரமாகத் தோன்றும் காய்ச்சல்களினால் இரத்தத்தில் ஏற்படும் நச்சுத்தன்மையும் இந்த நோய் உண்டாகக் காரணமாகிறது. சில விதமான நாட்பட்ட வாதநோய்களும் சிறுநீரகம் பாதிப்படைய ஏதுவாகிறது. ஈய நஞ்சுகளும் சிறுநீரகத்தைத் தாக்குகினறன. சில வேளைகளில் கர்ப்பிணிகளிலும் சிறுநீரக அழற்சிநோய் காணப்படுகிறது.

தீவிர அழற்சியின் போது கடுமையான வேதனையுடன் கூடியதாகவும் சிறுநீரின் அளவு மிகக்குறைந்தும் சிறுநீரில் புரதச்சத்து, வெண் சீவ அணுக்கள், செஞ்சீவ அணுக்கள் காணபபடும். உடல் முழுவதும் வீக்கம் ஏற்படும். சில வேளைகளில் மரணம்கூட நிகழலாம். சிறுநீ உப்பு வெளியேறுவது வெகுவாகக் குறைந்துவிடும். இதனால் இரத்தத்தில் சிறு நீர் உப்பு அதிகரித்துக் காணப்படும். இந்நிலையை ஆங்கிலத்தில் **High Blood Urea** என அழைப்பார்கள்.

இத் தீவிர நோய் தணிவடையலாம் அல்லது நாட்பட்ட நோயாக மாறலாம். நாட்பட்ட அழற்சியின்போது சிறுநீரகத்தின் உள் அமைப்புகளில் வெடிப்புகள் காணப்படுகின்றன. இதனால் சிறுநீரகத்தின் அமைப்புகளில் ஒழுங்கீனங்கள் ஏற்படுகிறது. சில வேளைகளில் சிறுநீரகம் வீங்கிக் காணபபடும். நாட்பட நாட்பட சிறுநீரைப் பிரிக்கின்ற கலங்கள் சிதைவடைகின்றன. இதனால் இரத்தத்தில் இருந்து சிறுநீர் சரியான முறையில் பிரிக்கப்படாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் இரத்த அமுக்கம் அதிகரித்துத் தோன்றும். நாட்செல்லச் செல்ல அதிகரித்த இரத்தமுக்கத்தினால் இருதயத்தில் பாதிப்புக்கள் தோன்றுகின்றன. இவ்வாறு சிறுநீரக அழற்சிநோயினால் ஏறுபடும் பாதிப்புக்களினால் சிறுநீரகங்கள் சேதம் அடைந்து முடிவில் மரணத்துக்கு இட்டுச் செல்கின்றன.இந்த நோய்களை மருந்துகளின் மூலம் கட்டுப்படுத்த முடியாத ஒரு நிலையினாலேயே மேல் நாடுகளில் பரவலாகச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றது. இன்று நமது நாட்டிலும் சிறுநீரக அழற்சிநோயினால் பெரும்பாலானோர் அவதிப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொள்வது எல்லோராலும் முடியாத காரியம். இதற்குப் பெருந்தொகையான பணம் வேண்டும். அதற்கும் மேலாக சுகதேகி ஒருவரின் நல்ல நிலையல் உள்ள சிறுநீரகம் தேவைப்படுகிறது.

பத்திரிகைகளில் அநேகமாக மாற்று சிறுநீரகத்திற்கான விண்ணப்பங்களையும், அறுவை சிகிச்சைக்கான பணத்தைக் கோறும் விண்ணப்பங்களையும் காணலாம்.

சித்தமருத்துவ முறையில் சிறுநீரக அழற்சிநோயினால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நோயாளர்களுக்குச் சுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நோயில் நோயாளி மிகவும் கவனத்துடன் நடந்துகொள்ளவேண்டும். அழற்சி அடைந்திருக்கின்ற சிறுநீரகங்களை உருத்தக்கூடிய உணவுகளையோ, நீர் வகைகளையோ, மருந்துகளையோ கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும். குறிப்பாக முருங்கைக்காய், தக்காளிக்காய், முட்டை, உருளைக்கிழங்கு, அன்னாசிப்பழம் ஆகியவற்றை நீக்கவேண்டும்.

சாதாரணக் காய்ச்சல் ஏற்பட்டாற்கூட உயிர்க்கொல்லி மருந்துகளையோ அல்லது இரசாயன மருந்துகளையோ பாவிப்பதைத் தவிர்க்கவேண்டும். முக்கியமாக [illegible] நோய் உள்ளவர்களுக்கு வேறு வியாதிகள் ஏற்பட்டால் தாம் சிகிச்சை பெறும் வைத்தியருடைய ஆலோசனையுடனேயே மருந்துகளை உட்கொள்ளவேண்டும். தாமாக காய்ச்சல் தடிமன் வியாதிக்குப் பாவிக்கப்படும் குளிகைகளைக்கூட பாவிக்கக்கூடாது. ஏனென்றால் பாதிக்கப்பட்ட சிறுநீரகம் இம் மருந்துகளினால் செயலிழக்கும் நிலை ஏற்படலாம். இப்படியான நேரங்களில் கொத்தமல்லி, நற்சீரகம், மிளகு, சுக்கு, தூதுவளை ஆகிய மூலிகைகளை அவித்து வடிகட்டி கற்கண்டு அல்லது தேன் கலந்து குடிப்பதனால் எந்தவிதமான ஆபத்துக்களும் ஏற்படமாட்டாது என்பது அனுபவவாயிலாகக் கண்டறியப்பட்டுள்ளது. உடம்பின் சூட்டைத் தணிக்கக்கூடியதும் அலற்சியை நீக்கக்கூடியதுமான மூலிகைகளின் குடிநீர் இந்நோயைத் தணிப்பதில் நன்றாக வேலைசெய்கிறது. அவையாவன:

சிறுநெருஞ்சி, ஆனை நெருஞ்சி, சுரையிலை, கற்றாளம் சருகு, வெள்ளரி வித்து, நன்னாரி, சீந்தில், சிற்றமட்டியாகும்.

இவற்றில் இருபத்தைந்து கிராம் வீதம் வாங்கி மூன்று போத்தல் நீர்விட்டு 3/4 போத்தலாக வற்றவைத்து ஒரு வேளைக்கு 2அவுன்ஸ் வீதம் ஒருநாளைக்கு மூன்று தடவை தினமும் குடித்து வரவேண்டும். சலம் போவது குறைவாக இருந்தால் நீர் முள்ளி, தேங்காய்ப்பூக் கீரை, முல்லை போன்ற சரக்குகளையும் சேர்க்கலாம். தகுந்த வைத்திய ஆலோசனையின்றி மருந்துகளை நோயாளர்கள் தமது அறிவுக்கு ஏற்ப பாவிப்பதால் எதிர்பார்க்கும் நன்மைகளுக்குப் பதிலாக தீமைகளே விளையலாம். இக் குடிநீருடன் சலோதாரி மணி, தேத்தாங்கொட்டைக் குளிகை, பொரிகாரக் குளிகை, ஏதாவதொரு மருந்தில் ஒருநேரம் ஒரு குளிகைவீதம் குடிப்பது விரைவாக நோயை நீக்க உதவும். நோயின் நிலை முற்றிக் காணப்படுமானால் அமுதசர்க்கரை, அமுத ஏலாதிச் சூரணம், சிங்கி பற்பம், வெண்காரபற்பம், பொரிகார பற்பம் ஆகிய மருந்துகளில் ஒன்றையோ அல்லது இரண்டையோ ஒரேவேளையில் கொடுக்கலாம். பூரணச் சந்திராதி இருதயம் பாதிக்கப்பட்ட நிலையில் அதைச் சீரசெய்வதற்கு நல்ல மருந்தாகும்.

மருந்துகளை விட இந்நோய் குணமடைவதற்கு பத்தியம் மிகமிக அவசியமானதாகும். சிசிச்சைகள் ஒன்றரை மாதங்கள் நீடித்தாலும் பத்தியங்கள் ஆறுமாதங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் உப்பு சேர்க்கக்கூடாது. தவீர்க்க வேண்டும் ஊறுகாய், பழப்புளி, மீன் முக்கியமாக ஆகாது. ஊர் அரிசி, பாசிப்பயறு, சாம்பல் வாழைப்பிஞ்சு, முள்ளங்கி, சுரைக்காய், நீற்றுக்காய், பசுப்பால், ஈர வெங்காயம், தேங்காய் சேர்க்கலாம். புகை, மதுபானம், பகல் நித்திரை, உடல் உறவு ஆகாது. வெந்நீரில் குளிக்கலாம்.

இவ்வாறு மருந்துகளையும், பத்தியங்களையும் கவனமாகக் கடைப்பிடித்தால் நோயாளியும் குணமடைவதுடன் மாற்று சீறுநீரக அறுவைச சிகிச்சைக்கு அவசியமும் ஏற்படாது. சுகதேகியும் நல்ல சிறுநீரகத்தை நீக்கி தொந்தரவு கொடுக்காமல் தவிர்க்கலாம்.

## பலாப்பழத்தின் மருத்துவம்

**உலகில் உள்ள பழவகைகளில் உருவத்தில் மிகப் பெரியதாக இருபபது பலாப்பழம்தான்.**

**இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட பலா தற்போது பர்மா, இலங்கை, மலேசியா, பிரேசில் போன்ற நாடுகளிலும் வளர்க்கப்படுகின்றது. சிங்கப்பூர்ப் பலா, இலங்கைப் பலா ஆகிய இனங்கள் புகழ்பெற்றவை மட்டுமல்லாமல் ருசியான பழங்களையும் தருவனவாகும். பலாவில் 100 இனங்கள் வரை உள்ளன.**

*** 100கிராம் பலாச்சுளைகளில் 18.9% மாச்சத்து, 2% புரோட்டின் 1% கொழுப்பு, 0.8% கனிமச்சத்தும் உள்ளன. அத்துடன் 'ஏ' விற்றமின் சத்து அதிகமாகவும், 'சி' வீற்றமின் சத்து சிறிதளவும் பலாப்பழத்தில் உண்டு.**

*** பலாச்சுளைகளை தேனில் தொட்டு அளவுடன் சாப்பிட்டு வந்தால் நரம்புகளுக்குப் புத்துணர்ச்சியும் இரத்த விருத்தியும் ஏற்படும். அத்துடன் எளிதில் ஜீரணிக்கவும் செய்யும். தேன் சேர்க்காமல் சாப்பிட்டால் இந்த நன்மைகள் ஏற்படமாட்டாது.**

*** சிறுநீரை நன்கு கழிக்கவும் உயிர் அணுக்களை வளர்க்கவும் பலாப்பழம் உதவுகிறது. மூளை நரம்புகள் நன்கு பலமாகவும், அளவுடன் சாப்பிட்டால் கண்பார்வை நன்கு கூர்மையாகவும் தெரியும். பலாப்பழத்தை பெரும்பாலும் உணவுக்குப்பின் சாப்பிடுவது நல்லது. இது குளிர்ச்சியான பழமாதலால் வாத, சர்க்கரை நோய் உள்ளவர்கள் தவிர மற்றவர்கள் அளவுடன் சாப்பிட்டால் நன்மைகள் உண்டு.**

☼ ☼ ☼



**கைதடி ப.நோ.கூ.சங்க பொதுமுகாமையாளராக இருந்து இளைப்பாறிய கந்தையா சற்குணநாதனின் பிரியாவிடை வைபவத்தில் சங்கத் தலைவர், இயக்குநர்கள், பணியாளர்களுடன் சேர்ந்து எடுக்கப்பட்ட படம். நடுவில் சற்குணநாதன் தம்பதிகள் காணப்படுகிறார்கள்.**

**பயிர் செழிப்பாக வளருவதற்கு எருவும் நீரும் அவசியமாதல் போல எண்ணங்கள் விருத்தியாவதற்கு அறிவும், ஊக்கமும் அவசியமாகும். விலங்கினங்கள் அழிக்காதபடி பயிரைக் காப்பது போல மலைப்பும், கோழைத்தனமும் வந்து எண்ணங்களை அழிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.**

**குடாநாட்டில் கடந்த 98 ஆம் ஆண்டு முதல் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் விபரங்கள் :**

| ஆண்டு | சாதாரண மலேரியா | மூளை மலேரியா | கலப்பு மலேரியா | பாதிக்கப்பட்டவர் தொகை |
|---|---|---|---|---|
| 1998 | 46,006 | 1,733 | 63 | 47,802 |
| 1999 | 32,075 | 234 | 16 | 32,915 |
| 2000 | 6,997 | 234 | 11 | 7,242 |
| 2001 | 1,159 | 200 | 6 | 1,365 |
| 2002 | 1,419 | 401 | 9 | 1,829 |
| 2003 | 377 | 33 | - | 410 |

# புரியாத அர்த்தங்கள் - 10

**தொடர் நாவல்**

**கே.எஸ்.ஆனந்தன்**

> நம்பிக்கையுடன் இறைநாமத்தை ஜபித்து வந்தால் காற்றில்லாத இடத்தில் உள்ள கைவிளக்கின் சுடர் போல மனம் தானாக ஒருமைப்படும். காற்றே சுடரை ஆடச் செய்கின்றது. அதேபோல நம்மிடமுள்ள லௌகீக ஆசைகளும் சபலங்களுமே மனதை அமைதியற்றதாக்குகின்றன.
>
> -அன்னை சாரதாதேவி.

இரவு மணி பன்னிரண்டு என்பதை சுவர்கடிகாரம் மணியடித்து தெரியப்படுத்தியது. எவ்வளவோ முயன்றும் தூக்கம்வராது கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள் சௌந்தர்யா. நடந்து முடிந்த நிகழ்வுகள் ஒவ்வொன்றாக சிந்தனையில் தோன்றி தூக்கத்தை துரத்திவிட்டிருந்தன. நளினியிருந்தால் அவளோடு பேசியாவது சிந்தனைக் குதிரையைக் கடிவாளம் போட்டு இழுத்து நிறுத்தியிருககலாம். அவளில்லாத தனிமையை உணர்ந்து வருந்தினாளாயினும் தறிகெட்டு ஓடும் சிந்தனைக்குதிரை பல்வேறு இனிய நினைவுகளை மனதில் தோன்ற வைத்து அவள் உணர்வுகளை இன்பப் புழுக்கமிட வைத்துவிட்டிருந்தது.

கூட்டுறவுத் தினவிழாவில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் அவள் தயாரித்து அரங்கேற்றிய 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' எனும் சிறுவர்களது இசை நாடகத்தினை மேடையில் புகழ்ந்து பேசிய கூட்டுறவு உதவி ஆணையாளர் கிருஷ்ணகாந்தன் விழா நிறைவுபெற்றதும் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர் செல்லையா வீட்டில் நடைபெற்ற விருந்தின்போது தனக்கு பக்கத்திலுள்ள நாற்காலியில் வந்து அமர்ந்ததும், தனது தகப்பனாரிடம் தான் படித்ததாக கூறியதும், தங்கள் வீட்டு விலாசத்தினைக் கேட்டுப் பெற்றதும், வார முடிவில் ஊருக்குப் போகும் போது தங்கள் வீட்டுக்குப் போவதாகக் கூறியதும் அவள் சிந்தனையைக் குடைந்துகொண்டிருந்த புரியாத அர்த்தங்களாக புழுங்கிக் கொண்டிருந்தன.

விருந்து முடிந்ததும் அவனுடன் கதைத்துக்கொண்டிருந்த அந்த இனிய ஞாபகம் அவள் நெஞ்சில் குறுகுறுத்தது.

''ஹலோ மிஸ் சௌந்தர்யா, நான் உங்கள் அப்பாவுடைய ஸ்ருடன்டா இருந்தனான். அவரிடம் படித்தவர்கள் பெரும்பாலும் சகல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்கள். எனக்கும் அந்தவகையில் இலக்கியம், நாடகம், சங்கீதம் ஆகியவற்றில் கொஞ்சம் ஈடுபாடுண்டு'' என்றான்.

''இந்தக் காலத்தில் யார் சார் படிப்பித்த ஆசிரியர்களை நினைவில் வைத்திருக்கின்றார்கள். அப்பாவிடம் படித்தவர்கள் எல்லோரும் அப்பாவைப் புகழும் போது எனக்குப் பெருமையாயிருக்கின்றது'' என்றாள்.

''உங்கள் அப்பாவைப் போலவே உங்களுக்கும் கடமையுணர்வுக்கு மேல் சேவையுணர்வுமிருக்கின்றது. நான், எனது டியூட்டி என்று இருந்தால் இப்படி மகிழ்ச்சியான ஓர் விழாவில் நீங்கள் சம்பந்தப்பட்டிருப்பீர்களா?''

''இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தினை மிஸஸ் செல்லையா ரீச்சரும், மிஸ்டர் சிதம்பரநாதனும் தான் எனக்கு அளித்தனர். வெட்டிப் பொழுதுபோக்குவதை விட்டு இவற்றைச் செய்து மற்றவர்களையும் மகிழ்ச்சிப்படுத்துவது எனக்கும் ஓர் மனநிறைவைத் தருகின்றது.''

''உண்மையில் நான் முகஸ்துதிக்காகக் கூறவில்லை. கூட்டுறவு என்றால் என்ன என்ற மையக்கருத்தை வைத்து அதுவும் இளஞ்சிறார்களை நடிக்க வைத்து அற்புதமாகச் செய்திருக்கின்றீர்கள். யாழ்.கூட்டுறவு ஆணையாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவுக்கு இந்த நிகழ்ச்சியை வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அழைத்தால் வருவீர்களா?''

''நிட்சயமாக. மிஸஸ் செல்லையா ரீச்சரிடமும் சொன்னீர்களானால் எங்கள் பிரின்சிப்பல் சம்மதமளிப்பார்'' என்றாள்.

''தாங்கியூ. வீக்என்ட்டுக்கு ஊருக்கு போறன். உங்களப்பாவைச் சந்திப்பேன்'' என்று விடைபெற்றுப் புறப்பட்டான்.

அவன் புறப்பட்ட பின்பு திருமதி செல்லையா புன்சிரிப்புடன் அவளருகே வந்து, ''சௌந்தர்யா வீட்டுக்குப் போனதும் பார்வதியிடம் சொல்லி திருஸ்டி சுத்திப்போடு. எல்லோரும் உன்னைப் பற்றித்தான் விசாரித்தார்கள்'' என்று அவள் கன்னத்தில் செல்லமாக கிள்ளினார்.

''ரீச்சர் எல்லாம் உங்களால் வந்ததுதான். நான் மிஸ்டர் கிருஸ்ணகாந்திடம் கூட சொன்னேன்'' என்றாள்.

''நீ என்னதான் சொன்னாலும் அது உன்னிடம் உள்ள நல்லகுணம். மாட்டுக்கு தண்ணீரைக் காட்டலாமே தவிர அதைக் குடிக்கவைக்க முடியுமா? அதுபோல வழியைக் காட்டத்தான் என்னால் முடிந்தது. நீ புத்திசாலி அதனைத் திறம்படச் செய்துள்ளாய். அவ்வளவுதான்'' என்றார்.

''நல்லாரைக் காண்பதுவும், நல்லார் சொற்கேட்பதுவும், நல்லாரோடு இணங்கியிருப்பதுவும் நன்று என்று முதுரை இருக்கே ரீச்சர்'' என்று சிரித்தாள் சௌந்தர்யா.

''இதுதான் சௌந்தர்யாவிடம் உள்ள பிளஸ் பொயின்ற். அதுசரி சௌந்தர்யா, அந்தப் பையன் இந்த விழாவுக்கு வந்ததும் ஒரு விடயத்துக்கு நல்லதாய்த்தான் இருக்கலாம். இவரிடம் உன்னைப் பற்றித் துருவித்துருவி கேட்டிருக்கின்றான். உன்ரை அப்பாவிடம் முன்பு படித்ததாக் கூறினான். நல்ல குடும்பத்தில் உள்ளவன். அண்ணன்மார் இருவர் கல்யாணம் செய்திட்டார்களாம். இவன் இன்னும் முடிக்கவில்லை. சௌந்தர்யாவில இவன் கண் வைத்திருக்கின்றான் போலிருக்கு என்று இவர் சொன்னார். உனக்கு எப்படி?'' என்று சிரித்துக்கொண்டே கேட்டாள்.

''ரீச்சர் நான் பேராசைக் காரியில்லை. அப்படி ஏதும் எண்ணம் எனக்கில்லை. அப்பா, அம்மா விருப்பம் போலத்தான் நான் பதில் கூறமுடியும். எங்களுடைய விருப்பங்கள் எதுவும் நடந்து விடுவதில்லை. ஆண்டவன் விருப்பப்படிதான் எதுவும் நடக்கும். நான் என் மனதில் எந்தவிதமான ஆசைகளையும் அர்த்தமில்லாது வளர்த்துக்கொள்வதில்லை. கவலைகள் ஏதுமின்றி வாழ்வதற்கும் இதுதான் காரணம்'' என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு எல்லோரிடமும் விடைபெற்றுப் புறப்பட்டாள்.

''ரீச்சர், சௌந்தர்யா என்னவாம்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தார் சிதம்பரநாதன்.

''அவள் சரியான அழுத்தக்காரி. அவள் பேசுவது எதுவும் புரியாத அர்த்தங்களாகத்தான் இருக்கின்றது. நல்ல பிள்ளை, நிட்சயமாக இந்தக் கல்யாணம் நடந்தே தீரும். நளினியிடமும் சொல்லிவையும்'' என்று கூறிச் சிரித்தாள்.



மறுநாள் நளினியைச் சென்று பார்த்த சௌந்தர்யாவுக்கு கிடைத்த செய்திகளைக் கொண்டு பார்த்தபோது மனதில் ஓர் சபலம் தோன்றத்தான் செய்தது. ஆனாலும் கல்யாணம் என்பது கடவுளால் அமைக்கப்பட்ட மேடையில் நடைபெறும் ஓர் நாடகம்தான் என எண்ணியவள் அந்த நினைவுகளை உதறிவிட்டு வழமையான நிலைக்கு ஆளாகி விட்டாள்.

* * *

தன்னைத்தானே புத்திசாலியாக நினைத்துக் கொள்பவர்கள் தன்னை விட மற்றவர்கள் புத்திசாலிகளாக இருப்பார்கள் என்பதை மறந்து விடுகின்றனர். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எதிராளியிடம் சிக்கித்தவிக்கும் போதுதான் தங்கள் பேதமையை நினைத்து வருந்துவதுண்டு.

சரஸ்வதி தான் புத்திசாலி என்று எண்ணி எல்லோர் வாயையும் அடக்கிவந்தவள், மருமகள் சுகுணா கூறிய விடயத்தைக் கேட்டதும் பதில் கூற முடியாது தலை கிறுகிறுக்க முழித்துக்கொண்டு நின்றிருந்தாள்.

''மாமி, என்னை மன்னிச்சிடுங்க. உங்களை எதிர்த்துப் பேசியது தப்புத்தான். ஆனால் மாமாவையும் அம்மாவையும் நீங்கள் மரியாதைக் குறைவாகப் பேசியதும் தப்புத்தான். என்னையோ, உங்கள் மகனையோ எப்படி வேண்டுமானாலும் பேசுங்கள். நான் கோபிக்க மாட்டன்'' என்று சுகுணா கூறியதும் ஓரளவு மனம் தேறிய சரசுவதி உள்ளுக்குள் குமுறினாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் சிரித்துச் சமாளித்தாள்.

''அதில்லைப் பிள்ளை என்னை அவமதித்தவங்களைப் பற்றி எங்கள் வீட்டிலே கதைப் பதைப் பிடிக்காமல்தான் நானும்..''

''சரி விட்டுத் தள்ளுங்க. அத்தக்க முறைகளாலை நாம் ஏன் சண்டை போடவேண்டும்?'' என்று கூறிக்கொண்டே அவ்விடம் விட்டகன்றாள்.

பெரிய இக்கட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றிய மருமகளை நன்றியுணர்வோடு பார்த்துக்கொண்டே ஆறுமுகமும் உள்ளே சென்றார்.

''பிள்ளை இது அடிபட்ட புலி. மிக அவதானத்துடன் இருக்கவேண்டும்'' என்று மகளுக்கு இரகசியமாக உபதேசம் செய்துகொண்டிருந்தாள் முத்துப்பிள்ளை.

* * *

வார விடுமுறையில் வீட்டுக்கு வந்த கிருஸ்ணகாந்தன் தன் விருப்பினை பெற்றோரிடம் கூறியதும் அவர்களடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கல்யாணப்பேச்சு எடுத்தாலே அதனைக் காதில் வாங்கிக்கொள்ளாது அலட்சியமாய் செல்பவன் வலிய வந்து கூறியதும் விபரங்களைக் கேட்டறிந்த பெற்றோர் உடனடியாகவே காரியத்தில் இறங்கிவிட்டனர்.

அன்று மாலைக்குள் சிவலிங்கம் வாத்தியார் வீட்டுக்குச் சென்று சகல விடயமும் பேசி ஓர் முடிவுக்கு வந்துவிட்டிருந்தனர்.

திங்கட்கிழமை காலை பாடசாலை சென்ற சௌந்தர்யாவுக்கு கடிதம் ஒன்று காத்திருந்தது. அவசரமாகக் கடிதத்தைப் பிரித்துப் படித்தவள் இன்ப அதிர்ச்சிக்குள்ளானாள். காற்றிலேறி விண்ணையும் சாடுவோம் என்ற நிலைக்காளானாள். ஒருமுறைக்கு பலமுறை அக்கடிதத்தைப் படித்து மகிழ்ந்தவள் கடித்தத்தை மடித்து வைத்துவிட்டு கற்பனைச் சிறகடித்துப் பறக்குஞ் மனக் குதிரையை அடக்க விரும்பாது அதன் போக்கில் அகமகிழ்ந்திருந்தாள்.

* * *

நாட்கள் சில கடந்ததும் ஊரெல்லாம் இதேகதை பரவிவிட்டது. சரஸ்வதியின காதுக்கும் கதை எட்டிவிட்டிருந்தது. மனதுக்குள் வைத்துக் குமைந்துகொண்டு அமைதியாய்த் திரிந்தாள். ஒருநாள் காலை எழுந்து வெளியே புறப்பட்டவள் மதியம்தான் வீடு திரும்பினாள். அன்று தொடக்கம் அவள் முகத்தில் ஓர் வெற்றிப் புன்னகை மிளிர்வதை அவதானித்தார் ஆறுமுகம். ஆனாலும் அவ ராக அவளிடம் பேசுவதை நிறுத்தி விட்டிருந்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க...)

## இலக்கியக் காட்சிகள்

### கற்பனையும் எதிர்பார்ப்பும்

கவிச்சக்கரவர்த்தி கம்பன் தன் கற்பனைத் திறத்தால் ஓர் இலட்சிய நாட்டை உருவாக்குகின்றான். அங்கே வாழும் மக்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும் என்று சிந்திக்கின்றான். எல்லோரும் எல்லாச் சிறப்பும் பெற்றிருப்பதால் இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை. செம்மையற்ற சிந்தனை இல்லாத மக்களிருப்பதால் குற்றச் செயல்களுக்கு இடமில்லை. அகலா மரணங்கள் இல்லை, வறுமையில்லை. இரப்போர் இல்லாததால் வள்ளல்களும் இல்லை. கள்வர் இல்லாததால் காவலும் பகைமையும் இல்லை. மன்னனுக்கு தண்டனை வழங்கக்கூடிய வாய்ப்புகளும் இல்லாமற் போயின. எல்லோரும் எல்லாப் பொருட்களும் இயற்கையாகவே பெற்று சிறப்புற வாழ்கின்ற பெருமைபெற்று விளங்கினர்.

இத்தகைய ஓர் இலட்சிய நாட்டை தன் கற்பனையில் சிருஷ்டித்த கம்பநாடான், அந்த நாடு வெறும் கற்பனை நாடாக இருக்கவேண்டியதில்லை. அதை இவ்வுலகில் நிறுவ முடியும் என்று அதற்குரிய வழிகாட்டலையும் உறுதியுடன் வகுத்தளித்துள்ளான்.

நன்கு உயர்ந்த இலட்சியங்களுடன் கூடிய உடன்பாட்டுக் கல்வியை மக்களுக்கெல்லாம் வேற்றுமையின்றி அளித்தல் வேண்டும். உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு காட்டாத கல்வி முறையை மக்களுக்கு அளிப்பதன் மூலம் அக்கல்வி கேள்வியைத் தூண்டும் - பரப்பும், நன் முயற்சியை மேற்கொள்ள மக்கள் ஊக்கப்படுவார்கள். பொருள்வளம் செழிப்புறும். மக்களிடையே அன்புணர்வு பெருகும். அறிவாற்றல் வளரும். அன்பும் - அறிவும் சேர்ந்து அற வாழ்க்கையைத் தோற்றுவிக்கும் பேரின்பம் பெருகும். இக் கருத்துக் கருவூலங்கள் அடங்கிய ஓர் காட்சியை கம்ப சித்திரத்தில் பார்ப்போம். இப்படி ஒரு நாடு மலரும் நாள் என்று வருமோ?

ஏகம் முதல் கல்வி முளைத்து
எழுந்து எண்இல் கேள்வி
யாகம் முதல் நிண் பணை போக்கி
அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித்
தருமம் மலர்ந்து
போகம் கனி ஒன்று பழுத்தது
போலும் அன்றே.

பிறைசூடன்

# கட்டைவேலி – நெல்லியடி

# பல.நோ.கூ சங்கத்தின் சாதனை

யாழ். கூட்டுறவாளர்களால் கூட்டுறவு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்ட 2004 ஜனவரி மாதத்தை முன்னிட்டு கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம் பற்பல செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகிறது. சங்கத் தலைமைக் காரியாலயத்திலும் சங்கக் கிளைகள் அனைத்திலும் 1.1.2004 இல் கூட்டுறவுக் கொடி பறக்கவிடப்பட்டது "கூடுறவே நாட்டுயர்வு" அன்று ஏழைகளுக்கான கூட்டுறவு, இன்று எல்லோருக்குமான கூட்டுறவு.

மக்கள் சேவையே மகேசன் சேவை, யாதும் ஊரே யாவரும் கேளிர் போன்ற கூட்டுறவு வாசகங்கள் பொறிக்கப்பட்ட 10 பதாதைகள் பிரதான இடங்களில் தொங்கவிடப்பட்டது. சங்கத்தால் அச்சிடப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகள் அடங்கிய சுவரொட்டிகள், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையினால் எமக்கு வழங்கப்பட்ட கூட்டுறவு மாதம் தொடர்பான சுவரொட்டிகள், எமது சங்கச் செயற்பாடுகள் பற்றிய துண்டுப்பிரசுரம் அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் வழங்கப்பட்டது.

கூட்டுறவு மாதத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையும், கூ.அபிவிருத்தித் திணைக்களங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் அறிவித்தவாறு செயற்பாடுகள் அமைந்திருந்தன.

கூட்டுறவு மாதத்தின் முக்கிய இலக்கான அங்கத்துவத்தை அதிகரித்தல், சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகரித்தல் போன்ற விடயங்களில் சங்கம் புதிய அங்கத்தவர்களாக ஆயிரம் பேரையும் மேலதிக பங்குப் பணமாக 1 1/2 லட்சத்தையும் கூட்டுறவு மாதத்தின் இலக்காகக்கொண்டு செயற்பட்டது.

கிளைப் பொதுக் கூட்டங்களிலேயே பலர் மேலதிக பங்கைப் பெறுவதும் அங்கத்தவராக இணைந்து கொள்வதும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. ஏற்கனவே ஒரு பங்கு உள்ளவர்கள் மேலும் ஒரு பங்கையாவது அதிகரிக்க வேண்டும் எனவும் பணியாளர்கள் அனைவரும் அங்கத்தவராதல் வேண்டும் எனவும் கிளைக்குழு உறுப்பினராக உள்ளவர் இரண்டு பங்கும், கிளைக்குழுத் தலைவா, உபதலைவர், செயலாளர் மூன்று பங்கும், பொதுச்சபைப் பிரதிநிதியாகவுள்ளவர் நான்கு பங்கும், இயக்குனராக இருப்பவர் ஐந்து பங்கும் வைத்திருத்தல் வேண்டும் என்ற வேண்டுகோளை ஏற்று நிறைவு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் சாதாரண அங்கத்தவர்களுக்கு பங்கின் பெறுமதியில் 10 மடங்கும், விவசாய அங்கத்தவர்களுக்கு பங்கின் பெறுமதியில் 20 மடங்கும், கடன் வழங்குவதான பங்கின் பெறுமதியில் 20 மடங்கும் கடன் வழங்குவதற்கான நடவடிக்கை வெளிப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. பங்குப் பணம் ரூபா **500/=**ம் அதற்கு மேற்பட்ட பங்குப்பணத்துக்கு மக்கள் வங்கி வழங்கிவரும் வட்டியினை வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்களுக்கு அங்கத்துவ பங்கு பணத்திற்கு கையேடு வழங்கப்பட்டு வருகின்றது.

கூட்டுறவு மாதத்தை முன்னிட்டு சங்கம் பின்வரும் கிளைகளில் கிளைக்குழுப் பொதுக் கூட்டங்களைக் கூட்டி பிரசார நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மாலிச்சந்தி பிள்ளையார், முத்துமாரி அம்மன், வதிரி அம்மன், சண்டில், டைமன், கட்டைவேலி, கிழவி தோட்டம், யார்க்கரு, அந்திரான், துகவில், துன்னாலை மத்தி, நெல்லியடி, வல்லியானந்தம், அல்லையம்பதி, குடவத்தை, சந்திரா, கிளான்.

கூட்டுறவு மாதத்தை முன்னிட்டு சங்கம் தலைமைக் காரியாலயத்தில் ஐந்து பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. கிளைக்குழு உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது.

கூட்டுறவுமாதத்தை முன்னிட்டு நடைபெறும் ஒவ்வொரு பிரசாரக் கூட்டங்களில் சங்கத் தலைவர் திரு.சிதம்பரப்பிள்ளை தலைமை வகித்து கூட்டுறவு பற்றிய விரிவான விளக்கமளித்து வருகின்றார். கூட்டுறவு மாதத்தை முன்னிட்டு கல்வி உத்தியோகத்தர் திரு.வ.காந்திமதிநாதன், சங்கச் செயலாளர் திரு.பு. இராதாகிருஸ்ணன், கடன் வழங்கலுக்கு பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தர் திரு.வே. கார்த்திகேசு, வர்த்தக முகாமையாளர் திரு.சா.தணிகாசலபதி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இதில் கூட்டுறவுவாளர்கள் ஆர்வலர்கள் பெருமளவு ஆவலுடன் கலந்துகொண்டனர்.

அங்கத்துவம் சேர்த்தல், பங்குபணத்தை அதிகரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்ட பணியாளாகளுக்கு ஊக்குவிப்பு வழங்குவதாகவும் கூட்டுறவு மாதத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட கிளைக்கு பொதுக்கூட்ட உபசரிப்புக்குரிய செலவினை கிளை முகாமையாளருக்கு வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தை மாதத்தில் கிடைக்கப்பட்ட அங்கத்துவ விபரம்:-
புதிய அங்கத்துவம்:-206
பழைய அங்கத்துவம்:-204
1000/= -அங்கத்தவர்:- 14
மொத்த பங்குப் பணம்:-77360/=

அங்கத்துவம், பங்குப்பணம் தொடர்பாக எமது சங்கம் 2004ம ஆண்டில் அங்கத்துவத்தை 7500 ஆகவும், பங்குப் பணத்தை 10 லடசமாகவும் அதிகரிப்பதற்கான இலக்கை அடைவதற்கு சங்கம் செயற்பட்டு வருகிறது.



கூட்டுறவு மாதத்தையொட்டி நல்லூர் பல.நோ.கூ.சங்கத்தை வளர்த்தெடுத்த பழம்பெரும் கூட்டுறவாளர்களை மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

# அனைத்துலக பெண்கள் தின போட்டி முடிவுகள்

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவு சபைகளின் மாவட்ட மகளிர் குழு நடத்திய கட்டுரை, பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு:

**ஆண்டு 10, 11 கட்டுரை**

முதலாம் இடம் : இலக்கியா சிதம்பரநாதன் - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
இரண்டாம் இடம் : சர்மிளா சின்னையா - யா/விக்கினேஸ்வராக்கல்லூரி, கரவெட்டி.
மூன்றாம் இடம் : கிருஷ்ணப்பிரியா கோபாலகிருஷ்ணன் - யா/இமையாணன் அ.த.க. வித்தியாலயம்.

**ஆண்டு 12, 13 கட்டுரை**

முதலாம் இடம் : கோபிகா கிருஷ்ணராசா - யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
இரண்டாம் இடம் : பிரான்சிஸ் சேவியர் யேசுராஜி - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
மூன்றாம் இடம் : றஜிதா தணிகாசலபதி- யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**ஆண்டு 10, 11 பேச்சு**

முதலாம் இடம் : தெய்வேந்திரன் துஷ்யந்தி - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
இரண்டாம் இடம் : இரத்தினசிங்கம் சஸ்மிதா - யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
மூன்றாம் இடம் : அரியரட்ணம் ஹேமாலக்ஷ்மி - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**ஆண்டு 12, 13 பேச்சு**

முதலாம் இடம் : ஜோய்ரம்யா ரவிராஜ்- யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை.
இரண்டாம் இடம் : கலைச்செல்வி கிருஷ்ணபிள்ளை - யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி வல்வெட்டித்துறை.
மூன்றாம் இடம் : மீனலோசினி தருமராசா - யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**அங்கத்தவர் பேச்சுப்போட்டி**

முதலாம் இடம் : கலைவாணி கந்தசாமி - சாவகச்சேரி.ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
இரண்டாம் இடம் : வசந்தி பரராஜசிங்கம் - உரும்பிராய் கற்பகவிநாயகர் மகளிர் சி.க.வ.கூ.சங்கம்.

**அங்கத்தவர் கட்டுரைப் போட்டி**

முதலாம் இடம் : செல்வி.வசந்தி பரராஜசிங்கம் - உரும்பிராய் கற்பக விநாயகர் சி.க.வ.கூ.சங்கம்.
இரண்டாம் இடம் : செல்வி அருந்ததி முருகையா - தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்.
மூன்றாம்இடம் : செல்வி. தர்ஷிகா செல்வராசா - கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்.

**முன்பள்ளி போட்டி முடிவுகள்**

முதலாம் இடம் : சுதுமலையுவசக்தி - மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
இரண்டாம் இடம் : நாமகள் - கட்டைவேலி - நெல்லியடி **MPS**
மூன்றாம் இடம் : புலவர் முன்பள்ளி - மானிப்பாய்
நான்காம் இடம் : நக்கீரன் முன்பள்ளி - பருத்தித்துறை
ஐந்தாம் இடம் : வெள்ளாம்போக்கட்டி - கொடிகாமம்.

# புரியாத அர்த்தங்கள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மருமகளுக்கு நல்ல இடத்தில் கல்யாணம் நிட்சயமானது அவருக்கும் மகிழ்ச்சியாகவேயிருந்தது.

அன்று இரவு சாப்பிட உட்கார்ந்த ஆறுமுகத்தாரிடம் 'உங்கள் தங்கை மகளுக்கு கல்யாணமாமே" என்று அவளே கதையை ஆரம்பித்தாள்.

"ம்" என்றார்.

"என்ன ம்? உங்களுக்கு பரம சந்தோஷமாயிருக்குமே. அகத்தின் அழகு முகத்தில் தெரிவதைப் பார்த்தால் தான் கேட்கிறேன்"

"நீ என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறாய்? அவளுக்கு கல்யாணம் ஆனால் என்ன ஆகாவிட்டால் என்ன. அதை ஏன் தூக்கிப்பிடிக்கிறாய்?"

"என்ன சொன்னீங்க? அந்தச் சிறுக்கி சந்தோஷமாய் வாழ்வதை சரசுவதி பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாளா? நான் போட்ட சபதம் போட்டது தான். அவள் கழுத்தில் தாலி ஏறுவதை பார்ப்போமே" என்று ஆக்ரோசமாகக் கூறினாள்.

"அடிப்பாவி! நல்ல குடும்பத்திலே அவள் வாழ்க்கைப்பட போறாள். பணப் பேய் பிடித்தலையும் உன்னைப் போலில்லாமல் அவள் அழகாலும், குணத்தாலும் தாண்டி சீதனமில்லாமல் அவளை கல்யாணம் பண்ணப் போறான் அந்தப் பெடியன்"

"அப்படி நடக்கவிட்டிடுவாளா சரஸ்வதி! இங்கே பாரும். நான் முந்தநாள் எங்கே போனனான் தெரியுமா? மாப்பிளையின்ர தகப்பன் தாயிடம் உங்க மருமகளைப் பற்றி நல்லாச் சொல்லிவிட்டுத்தான் வந்தனான். நான் பற்றவைச்ச நெருப்பு இப்ப கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருக்கும். உங்கள் தங்கை வீட்டில் கல்யாணத்துக்குப் பதிலாக செத்தவீடு தான் கொண்டாடுவினம்" என்று ஆக்ரோசமாக கூறிக் கொண்டிருக்கையில் சாப்பாட்டுக் கோப்பையை அவள் மீது விட்டெறிந்தார் ஆறுமுகம்.

சாப்பாட்டுக்கோப்பையிலிருந்த பிட்டும், கறியும் அவள உடலெல்லாம் சிதறியதுக்க பத்திரகாளியாய் நின்றிருந்தாள் சரசுவதி.

(வளரும்)

# அடக்குமுறைகளில் இருந்து பெண்கள் விடுதலை பெறவேண்டும்

**அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.**

**கா.ராதிகா**

அனைத்துலகமும் பெண்ணுரிமையைப் பாதுகாக்கும் நோக்குடன் பெண்கள் தினத்தை ஆக்கபூர்வமாக கொண்டாடுகின்றது. அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட பெண்ணினம் விழித்தெழுந்து இன்று அனைத்துத் துறையிலும் முன்னின்று செயற்படுகிறது என்றால், மிகையாகாது. எனினும், பெண்கள் அடக்குமுறை முற்றாக அழித்தொழிக்கபபடவேண்டும் என்ற பெண்ணினத்தின் கோஷங்களும் இருக்கத்தான் செய்கிறது.

பெண்ணினத்தை உறவு முறையில் நோக்கினால் பெண்ணானவள் தாயாக, சகோதரியாக, மனைவியாகவிருந்து பல சுமைகளைச் சுமந்து வாழ்வது, மனிதத்துவத்துக்கு முதன்மை தருகிறது.

ஒரு பெண்ணைத் தாயாகவும், சகோதரியாகவும் பார்க்கும் சிந்தனை ஆண்களிடத்தில் தோன்றுமாயின் அடக்குமுறைக்கோ, வன்முறைக்கோ இடமில்லாது இருக்கும். புரட்சக் கவிஞர் பாரதியின் உள்ளத்திலிருந்து கிளைத்தெழுந்து வெளிவந்த கவிதைகள் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முனனரே பெண்ணின் விடுதலையாக வெடித்தது.

"மாதர் தம்மை இழிவு படுத்தும் மடமையைக் கொழுத்துவோம்."

என்ற பாரதியின் குரல் பெண்ணின் விடுதலைக்கான கவிதையின் அடிநாதமாகும். தமிழர் வாழ்வில், சங்ககாலத்தில் பெண்கள் சம உரிமையுடன் வாழ்ந்து வந்தமைக்கு சான்றுகள் உள்ளன. சங்காலத்தில் பெண்புலவர்கள் பலர் அரச சபையில் திறமைமிக்கவர்களாகப் பெருமையுடன் விளங்கினார்கள். இவர்களில் காக்கைபாடினியார், நச்சென்னையார் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

இன்றும் உலக நாடுகளின் தலைவியர்களாக பலர் விளங்கியிருக்கிறார்கள், விளங்குகிறார்கள். அரசியல் துறையில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகமாகவுள்ளது. அந்த வகையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா (இலங்கை), இந்திரா காந்தி (இந்தியா), கொல்டா மேயர் (இஸ்ரேல்), மார்க்கிரேட் தட்சர் (பிரிட்டன்), சந்திரிகா பண்டாரநாயக்க விஜயகுமாரதுங்கா (இலங்கை) போன்ற பெண்மணிகள் குறிபபிடத்தக்கவர்கள்.

பெண்களுக்கு உரிமைகள் ஓரளவு நிறைவுபட்டுவரும் வேளையிலும், அவர்களுக்கெதிரான பாலியல்வல்லுறுவு, சீதனக் கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பது எந்தவகையிலும் பெரும் வேதனையைத் தருவதாகவுள்ளது.

பெண்களைச் சுற்றிப் பிணைக்கப்பட்டுள்ள, அவளது உள்ளத்திற்கும் உடலிற்கும் பெரும் துயரம் விளைவிக்கின்ற பாலியல்வல்லுறுவு, சீதனக் கொடுமை ஆகியவற்றால் உருவாகிய முட்கம்பிகளை அறுத்தெறிய, பெண்கள் தின நாள் 2004இல் நாம் எல்லோரும் திடசங்கற்பம் பூணுவோம்.

# கூட்டுறவுச் சங்கங்களில் மகளிர் அங்கத்துவம் அதிகரிக்க வேண்டும்

கட்டைவேலி - நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மகளிர்குழு அங்கத்தவர்கள் தெரிவும், கலந்துரையாடலும் அண்மையில் 15.02. 2004 சங்கத் தலைமைக் காரியாலய மண்டபத்தில் மகளிர்குழு தலைவி பண்டிதை வ.பத்தினிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

மகளிர்குழுத் தெரிவு சம்பந்தமான கலந்துரையாடலின்போது மகளிர் தலைவி பண்டிதை வ.பத்தினிப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்,

சங்கத்தினால் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளின் ஆசிரியைகள் அனைவரும் சங்கத்தின் அங்கத்தவர்களாக இணைவதுடன், அவர்கள் ஒவ்வொருவரும் ஆகக்குறைந்தது 3பெண்களையாவது சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

2004ஆம் ஆண்டுக்கான மகளிர்குழுவின் தலைவியாக பண்டிதை வ.பத்தினிப்பிள்ளை மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவியாக திருமதி வ.சிவரஞ்சினியும் உறுப்பினர்களாக திருமதி கார்த்திகா, திருமதி ரவிதரா, செல்வி ந.நாகேஸ்வரி (சரஸ்வதி பாலர் பாடசாலை) ஆகிய மூவரும் தெரிவு செயயபபட்டார்கள்.

மகளிர் குழுவின் செயலாளராக சங்கக் கல்வி உத்தியோகத்தர் வ.காந்திமதிநாதன் கடமை ஆற்றுவார் என்றும் மாவட்ட கூட்டுறவு சபையினால் நடாத்தப்படும் பொதுக்கூட்டப் பிரதிநிதியாக திருமதி வி.சிவரஞ்சினியும் தெரிவு செய்யபபட்டார் என்றும் தெரிவிக்கப்படடுள்ளது.



யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட மகளிர் குழு அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு நடத்திய மனைப்பொருளியல் கண்காட்சியை பிரதம விருந்தினர், நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் பார்வையிடுகிறார். படத்தில் மகளிர் குழு உபதலைவி, கூட்டுறவு சபை மகளிர் விவகார உத்தியோகத்தர் ஆகியோரும் காணப்படுகிறார்கள்.

## பெண்ணே விழித்தெழு!

பாரதி காலத்தில் பாவையர் எல்லாமே
பாரினில் அடிமையாய் அடுக்களை தஞ்சமாய்
அடங்கியே வாழ்ந்தது மலையேறிப் போச்சுது
அடிமை விலங்கறுத்து அணங்கே விழித்தெழு!

அன்னை பூமியென்பர் சமுத்திர தேவியென்பர்
மனைவியில்லாது வாழும் மனையே பாழ் என்பர்.
எங்கும் பெண்மைக்கு முதன்மை தரும் சமுதாயம்
எங்கே வழங்குகிறது பெண்மைக்கு சமநீதி

ஓவியத்தில் அழகிய சித்திரந்தான் பெண் - இன்று
காவியமாய் களம் வென்று சாதனைகள் பல கண்டு
ஆவி பறக்கும் அனலெனச் சீறியெழும் சீரியரே
வீணே உறங்காதே பெண்ணே வழித்தெழு!

ஆணிற்குப் பெண் என்ன அங்கத்தால் குறைந்தாளா
ஆளுமை கல்வி கேள்விகள் நிறைந்தவளே!
குணத்தால் உயர்ந்தாலும் பணத்தால் விலை பேசும்
சமுதாய சிறையுடைக்க பெண்ணே விழித்தெழு!

பெண் வீட்டார் திருமுகமோ அமாவாசை
ஆண் வீட்டார் திருமுகமோ பௌர்ணமி - இது
மண வீட்டின் அவலநிலை என்னே சமவுரிமை
சம்பிரதாய வரம்புடைக்க பெண்ணே விழித்தெழு!

பட்டம் படித்தென்ன பதவிகள் வகித்தென்ன
சட்டம் சமவுரிமை பேசியென்ன சமுதாயச்
சந்தையில் விலைபேசும் நிலையன்றோ பெண்மைக்கு
பெண்ணுரிமை நிலைநாட்ட பெண்ணே விழித்தெழு!

பெண்ணே யுன்னுரிமை புதையுண்ட கல்லறைதான்
மண்ணில் உயிர் படைக்கும் யந்திரமே யல்ல நீ
விண்ணில் கால் பதிக்கும் கல்பனா வம்சம் நீ
கண்மணியே உறங்காதே பெண்ணே விழித்தெழு!

*திருமதி த.நல்லதம்பி.*
*உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்.*

## அங்கத்தவர், பணியாளர்கள்....

(01ஆம் பக்கத் தொடர்ச்சி....)

**பரிசில்கள் பெற்ற மாணவர்கள் விபரம்**

| சங்கத்தின் பெயர் | மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| அச்சுவேலி ப.தெ.வ.கூ.ச. | சதாசிவம் -கலையுகன் | 133 |
| அச்சுவேலி ப.தெ.வ.கூ.ச. | தூயமணி - ஜெறாயன் | 130 |
| அச்சுவேலி ப.தெ.வ.கூ.ச. | குணராசா- பிருந்தாவன் | 144 |
| கரவெட்டி ப.தெ.வ.கூ.ச. | சிவபாதம் - பிருந்தா | 119 |
| மானிப்பாய் ப.தெ.வ.கூ.ச. | ரவீந்திரன் - ராஜினி | 125 |
| மானிப்பாய் ப.தெ.வ.கூ.ச. | சுகுணதாஸ் -சுகேனியா | 119 |
| சுன்னாகம் ப.தெ.வ.கூ.ச. | ரவிச்சந்திரன்-யஸ்ரிநாத் | 128 |
| சுன்னாகம் ப.தெ.வ.கூ.ச. | வாமதேவன் - நிலானி | 125 |
| கோண்டாவில் ப.தெ.வ.கூ.ச. | சின்னராசா-மிதுலா | 122 |
| கோண்டாவில் ப.தெ.வ.கூ.ச. | நவரத்தினம் - கனியா | 131 |
| யாழ்ப்பாணம் ப.தெ.வ.கூ.ச. | சுதாகரன் - கவிசாந்தன் | 122 |
| கோப்பாய் ப.தெ.வ.கூ.ச. | தவராசா - கல்பனா | 119 |
| சாவகச்சேரி ப.தெ.வ.கூ.ச. | சண்முகராசா-வேணுசா | 128 |
| சாவகச்சேரி ப.தெ.வ.கூ.ச. | வைத்திலிங்கம் -சுமேகா | 126 |
| சாவகச்சேரி ப.தெ.வ.கூ.ச. | தியாகராசா - சுதர்சினி | 121 |
| சாவகச்சேரி ப.தெ.வ.கூ.ச. | சற்குணநாதன் - கேமா | 119 |
| கொடிகாமம் ப.தெ.வ.கூ.ச. | மகாலிங்கம் - நிகிந்தன் | 125 |
| பருத்தித்துறை ப.தெ.வ.கூ.ச. | சின்னராசா - மிஸ்சியானா | 130 |
| | விஜயகுமார் - சிந்துஜா | 148 |



கூட்டுறவாளர் மாதத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிராந்திய சி.க.கூ.சமாசம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட போது யாழ். மா.சி.க.கூ.ச.சமாசத் தலைவர் திரு.ச.முருகநேசன், பணிப்பாளர் திரு.ச.செல்வரத்தினம், நெடுந்தீவு பிராந்தியப் பணிப்பாளர் திரு.தில்லையம்பலம ஆகியோர் கலந்துகொண்டபோது எடுக்கபபட்ட படம்.

# சர்வதேச தொழில் தாபனம்

## International Labour organisation

சர்வதேச தொழில் தாபனம் மனிதாபிமானமுள்ள தொழில் நிலைமைகள் ஊடாக, தொழில் சமூக நீதியை ஊக்குவிக்கும் ஐக்கிய நாடுகளின் மிக முக்கியமான முகவராண்மை நிறுவனங்களில் ஒன்றாகும். இது 1919இல் வேர்சேய்ல்ஸ் உடன் படிக்கையின் பேரில் முற்தரப்பு குழுவொன்றாக உருவாக்கப்பட்டு 1946இல் ஐக்கிய நாடுகளுடன் சம்பந்தப்பட்ட முதலாவது தனித்துவமான முகவரண்மையாக பரிணமித்தது.

இதன் ஆரம்ப அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கை 45இல் இருந்து 1996 டிசம்பர் அளவில் 176 ஆக வளர்ந்துள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் குறுகிய காலத்தில் அதாவது 1948 யூன் முதல அங்கத்துவ நாடாக விளங்குகின்றது.

இம் முகவராண்மை யாப்பின் முன்னுரை "சமூக நீதியை அடிப்டையாக கொண்டிருந்தால் மட்டுமே நிலையான அனைத்துலக சமாதானத்தை நிலைநாட்ட முடியும்" எனக் குறிப்பிடுகின்றது. இதன் பிரதான குறிக்கோள் உலகெங்கிலுமுள்ள தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நலன்களை உறுதிப்படுத்துவதும் அத்துடன் சிறந்த வாழ்க்கைத் தரத்திற்கும் போதியளவு தொழில் வாய்ப்புக்களுக்கும், திருப்திகரமான தொழில் நிலமைகளுக்கும் வேதனத்திற்கும் உத்தரவாதமளிப்பதாகும்.

சமூகப் பங்காளர்கள் பொருத்தமான தீர்வுகளில் சம்பந்தப்பட்டிருந்தால் மட்டுமே தொழில்துறையில் சமூக நீதியை ஊக்குவிக்கலாம் என்ற குறிக்கோளை முன்னிட்டு, உலகெங்கிலும் சமூக நீதிக்காகவும் சிறந்த வாழ்க்கை நிலைமைகளுக்காகவும் கூட்டுச் செயற்பாட்டிற்கு அரசாங்கங்களையும், தொழில் தருநர்களையும் தொழில் பெறுநர்சார்ந்த தொழிற் சங்கங்களையும் இத்தாபனம் ஒன்றிணைத்துள்ளது.

இரண்டாம் உலகப் போரை அடுத்து 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த இத்தாபனம் இதன் விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது பிலடெல்பியா நகரில் கூடிய சர்வதேச தொழில் மாநாடு இத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கும் நோக்கத்திற்கும் மறு வரைவிலக்கணம் வகுத்த பிலடெல்பியா பிரகடனத்தை அங்கீகரித்தது.

இப்பிரகடனம் பின்வரும் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

* தொழிலாளர் ஒரு வியாபாரப் பொருளல்ல.

* நிலையான முன்னேற்றத்திற்கு கருத்துச் சுதந்திரமும் ஒன்று கூடும் சுதந்திரமும் அத்தியாவசியமாகும்.

* எவ்விடத்திலும் வறுமையானது, எவ்விடத்திலும் செழுமைக்கு ஆபத்து விளைவிக்கும்.

* மனிதர்கள் அனைவரும் சாதி, சமய, ஆண் பெண் வித்தியாசமின்றி சுதந்திரம், மகத்துவம், பொருளாதாரப் பாதுகாப்பு, சம வாய்ப்புகள் ஆகிய சுதந்திரத்திற்கான நிலைமைகளின் கீழ் தங்கள் பொருள் வளத்தையும் ஆன்மீக அபிவிருத்தியையும் நோக்கி முன்னேறிச் செல்லும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளடங்கிய சர்வதேச தொழில் மாநாடு சுவிற்சர்லாந்து, ஜெனிவா நாட்டிலுள்ள சர்வதேச தொழில் தாபன தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு ஆண்டும் யூன் மாதத்தில் கூடுகிறது. மாநாட்டின் பேராளர் குழு ஒவ்வொன்றிலும் 4 ஆட்கள் அடங்குவர். இவர்களுள் இருவர் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துவர். ஏனைய இருவரும், முறையே தொழில் தருநர்களையும் தொழிற் சங்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவர்.

### சர்வதேச தொழில் தாபனத்தின் அமைப்பு

அ) சர்வதேச தொழில் மாநாடு, உலகத் தொழிலாளர்களையும் அவர்களின் சமூகப் பிரச்சினைகளையும் பற்றி கலந்துரையாடுவதற்கான சர்வதேச மன்றமொன்றை ஏற்பாடு செய்வதுடன் தொழிலாளர்களின் குறைந்த பட்ச, தொழிற் தரங்களையும் நிர்ணயிக்கின்றது. மாநாடு நிகழ்சசித திட்டத்தையும் வரவு செலவு திட்டத்தையும் அங்கீகரிப்பதுடன் ஆளும் குழுவையும் தேர்ந்தெடுகின்றது.

ஆ) அமைப்பில் முற்தரப்புடையதாகவுள்ள ஆளும் குழு, மாநாட்டு நிகழ்ச்சி நிரலை வகுத்து, நிகழ்ச்சித் திட்டத்தையும் வரவு செலவுத் திட்டத்தையும் பிரேரித்து, சர்வதேச தொழில் தாபனத்தின் தொழிற்பாடுகளையும் மேற்பார்வை செய்கின்றது. ஆளும் குழுவின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும்.

இ) சர்வதேச தொழில் தாபனம் ஆளும் குழுவால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகத்தின் கீழ் செயற்படுகின்றது, இவ் அலுவலகமே தாபனத்தின் செயலகமும் தொழிற்பாட்டு தலைமைப் பணியகமும் ஆராய்ச்சி நிலையமும் வெளியீட்டு இல்லமும் ஆகும். தொழிற்பாடுகள் பல்வேறு அங்கத்துவ நாடுகளில் உள்ள பிராந்திய, பிரதேச கிளையலுவலகங்கள் ஊடாக பரவலாக்கப்பட்டுள்ளன.

### சர்வதேச தொழில் தாபனத்தின் பணிகள்

சர்வதேச தொழில் தாபனம், தொழிநுட்ப உதவியுடன் ஓர் அங்கத்துவ நாட்டின் அபிவிருத்திக்கு உதவுகின்றது. அத்துடன் கூடியவரை வேலையாட்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் உறுதிப்படுத்துகின்றது.

முழுமையான வேலை வாயப்பை எய்துவதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், முன்னேற்றத்தின் பலனை நியாயமாகப் பகிர்ந்து கொள்வதற்கும், வேலையாட்களின் உயிரையும் சௌக்கியத்தையும, பாதுகாப்பதற்கும், உற்பத்தியையும் தொழில் நிலைமைகளையும் மேம்படுத்துவதற்காக தொழிலாளர்களுக்கும் தொழில் தருநர்களுக்குமிடையில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச சமுதாயத்தாலும் நாடுகளாலும் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றது. இக்குறிக்கோளை அடைவதற்கு, சர்வதேச தொழில் தாபனம், குறைந்தபட்ச தொழில் நிலைமைகளைக் குறித்துரைத்து, சமவாயங்களையும் விதப்புரைகளையும் மேம்படுத்துகின்றது.

126 அங்கத்தவ நாடுகள் சர்வதேச தொழில் தாபன யாப்பில் எழுதப்பட்ட கோட்பாடுகளுக்கு கையொப்பம் வைத்து அதன் பணியில் ஒத்துழைப்பும் வழங்குகின்றன.

### சர்வதேச தொழில் தாபனத்தின் நடவடிக்கைகள்

சர்வதேச தொழில் தாபனம் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

☼ தொழில் மற்றும் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும், அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் உதவியாக சர்வதேசக்கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வகுத்தல்.

☼ இக்கொள்கைகளை நடைமுறைபடுத்துவதில் தேசிய அதிகாரசபைகளுக்கு வழிகாட்டிகளாக அமைவதற்கான சர்வதேச தொழிற் தரங்களை உருவாக்குதல்.

☼ இக்கொள்கைகளை நடைமுறையில் பயனுறுதியுள்ளவையாக்குவதில் அரசாங்கங்களுக்கு உதவும் விரிவான சர்வதேசத் தொழில் கூட்டுறவு நிகழ்ச்சித் திட்டத்தை வகுத்தல்.

☼ இம்முயற்சிகள் அனைத்தையும் மேம்படுத்த உதவும் பயிற்சிகள், கல்வி, ஆராய்ச்சி, வெளியட்டு நடவடிக்கைகள், தொழில் நுட்ப உதவிகள்அளித்தல்.

### சமவாயங்களும் விதப்புரைகளும்

சர்வதேச தொழில் தாபன யாப்பிலும் பிலடெல்பியா பிரகடனத்திலும் சேர்க்கப்பட்டுள்ள விழுமியங்கள், சமவாயங்களையும் விதப்புரைகளையும் உள்ளடக்கிய சர்வதேச சாதனங்களின் குழுவொன்றினாலும் வெளிப்படுத்தப்படுகின்றன. அத்துடன் அதனுடன் சேர்ந்து சர்வதேச தொழில் சட்டக்கோவையாகவும் அமைகின்றது. 1996 ஆம் ஆண்டளவில் இலங்கை 180 சமவாயங்களுள் 36ஐ அங்கீகரித்துள்ளது. ஒரு சமவாயம் பொருத்தனையொன்றை ஒத்ததாகும். சமவாயமொன்றை அங்கீகரிக்கும் ஏதேனும் நாடு அதில் தரப்பட்டுள்ள குறைந்தபட்ச நிபந்தனைகளையாவது அனுசரிக்க வேண்டும். உறுதிப்படுத்துவதன் மூலம், அவற்றின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு அங்கத்துவ நாடுகளுக்கு பிணிக்கும் கடபபாடுகளை உருவாக்குவதே சமவாயங்களின் உத்தேசமாகும். சர்வதேச மேற்பார்வையின் ஒரு பகுதியை இந்நாடுகள் ஏற்றுக்கொள்வதற்கான விருப்பத்தையும் இது சுட்டிக் காட்டுகின்றது.

சமவாயமொன்றின் குறிக்கோள், கூடுமானவரை அதிகமான வேலையாட்களின் தொழில் நிலைமைகளை திட்டவட்டமாகவும் கணிப்பிடக்கூடிய விதத்திலும் மேம் படுத்துவதற்காக, தன்னிச்சையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கடப்பாடுகளின் மூலம் சர்வதேச தொழில் தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு பங்களிப்புச் செய்வதாகும்.

சி.முத்துக்குமாரசுவாமி
உதவித்தொழில் ஆணையாளர்.

(வளரும்....)

# அனைத்துலக பெண்கள் தினம்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட மகளிர்குழு அனைத்துலக பெணகள் தினத்தை கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் சிறப்பாகக் கொண்டாடினர்.

மாவட்ட மகளிர் குழுத் தலைவி திருமதி ரதி சோதிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முதன்மை விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலைய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழீழம் செல்வி. சு.தமிழினி, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் சு.கணேசமூர்த்தி (பனை தென்னை வளம்), பொ.சிவலிங்கம் (கணக்காய்வு) ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் வரவேற்புரையை மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே.செல்வரத்தினம், பிரதம விருநதினர்களின் உரையை அடுதது போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களது பேச்சுக்கள் இடம் பெற்றது. இதனையடுத்து போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் மனையியல் பயிற்சியில் சித்தியெய்தியவர்களுக்கும், கணனிப் பயிற்சியில் சித்தியெய்தியவர்களுக்குமான சான்றிதழ்களை கூட்டுறவுச் சபைச் தலைவர் பெ.கனகசபாபதி மற்றும் பிரதம விருந்தினர்கள், கௌரவவிருந்தினர் வழங்கி கௌரவித்தனர்.

போட்டியில் கலந்து முதலாமிடத்ததைப் பெற்ற முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. மாவட்டச்செயலாளர் சு.சிவசுப்பிரமணியம் நன்றியுரை கூறினார்.

## பெயர் மாற்றம்

வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் துணை விதி பிரிவு 1இல் உள்ள வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து) என்ற பெயர்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)

என 05 -02- 2004ஆம் திகதி தொடக்கம் சட்டப்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத் திகதிக்கு முன் பழைய பெயரில் உள்ள சகல நடவடிக்கைகளும் வலுவுள்ளதாக அமையும் எனவும் சமாசத் தலைவர் அறிவித்துள்ளார்.

## விசேட பொதுக் கூட்டம்

சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் மா.கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

கூ.அ. உ. ஆணையாளர்கள் சு.கணேசமூர்த்தி, பொ.சிவலிங்கம் கி.தவராஜா சி.சபாரத்தினம் ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

## வளம் நிறைந்த...

இது முற்றாக மாற்றப்படவேண்டும். உள்ளூர் உற்பத்திகள் எம்மால் பயன்படுத்தப்பட்டு உள்ளூர் கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்படவேண்டும். இது எமது யாழ்.குடாநாட்டை மீண்டும் சர்வதேச தரத்திற்கு உயர்த்தும் என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் தலைவர் பெ.கனகசபாபதி பேசுகையில்,

எமது பிரதேசம் தொடர்ந்தும் வெளிநாட்டு உற்பத்திகளை நம்பி இருக்காது உள்ளூர்க் கைத்தொழில் துறையில் விரைவில் வளர்ச்சியடையும். இதற்கு கூட்டுறவுச் சபை தன் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது.

இதற்கு மக்களது ஒத்துழைப்பும் அவசியம். எமது உள்ளூர் உற்பத்திகளை ஊக்கு விக்கக்கூடியவாறு உள்ளூா உற்பத்திகளை மக்கள் பயன்படுத்த முன்வரவேண்டும்.

கைத்தொழில் பயிற்சித் திட்டங்களை தற்பொழுது பல்வேறு பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தி வரும் யாழ். மாவட்ட கூட்டுறவுசபை மேலும் விஸ்தரிக்கவுள்ளது.

இக்கண்காட்சியை யாழ்ப்பாணத்தில் நடத்துவதிலும் பார்க்க கிராமப்புறத்தையண்டிய பகுதிகளில் நடாத்துவதன் மூலம் அப்பகுதி மக்களை இவற்றில் நாட்டம் கொள்ள வைக்கலாம் என்பதாலேயே இக்கண்காட்சி இப்பகுதியில் நடத்தப்பட்டது. என்று கூறினார்.

இவ்வைபவத்தில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் செல்வி ம.மார்க்கண்டு, கிராமசேவையாளர் எஸ். முருகையா, கூட்டுறவுசபை பணிப்பாளர் சிவசுந்தரமூர்த்தி உட்பட பலரும் உரையாற்றினார்கள்.

யாழ்.மாட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல.12, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 2ஆம் மாடியில் இயங்கும்